**சுற்றுலா மற்றும் காணி அமைச்சு**
**காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு**
**பதவி வெற்றிடங்கள்**

காணி சீர்திருத்த ஆணைக்குழுவில் பின்வரும் வெற்றிடங்கள் நிலவும் பின்வரும் பதவிகளுக்கு தகுதியான இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

## பணிப்பாளர் (நிருவாக) - நிரந்தர

சேவை வகை: சிரேஷ்ட முகாமையாளர்

1. **தகைமைகள் :**

**1.1 வெளியக விண்ணப்பதாரிகள் :-**

(அ) கல்வித் தகைமைகள்

வணிக மேலாண்மை, மனிதவள மேலாண்மை, பொது நிர்வாகம், பொது மேலாண்மை, அறிவியல், சட்டம் ஆகியவற்றில் பல்கலைக்கழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இளங்கலை பட்டம் மற்றும் தொடர்புடைய துறையில் பட்டப்பின்படிப்புப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

மற்றும்

(ஆ) அனுபவம்

ஆரம்ப பட்டத் தகைமையைப் பெற்ற பின்னர் அரச அல்லது அரச கூட்டுத்தாபனத்தில் அல்லது நியதிச்சட்ட சபை அல்லது அங்கிகரிக்கப்பட்ட தனியார் துறையில் “ முகாமைத்துவ மட்ட” பதவியொன்றில் குறைந்த பட்சம் 15 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**1.2 உள்ளக விண்ணப்பதாரிகள்**

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் பிரதி பணிப்பாளரொருவராக முகாமைத்துவச் சேவைத் வகையில் 1 ஆம் தரத்தில் குறைந்த பட்சம் 05 வருட உரிய விடயப் பரப்பில் சேவைக் காலத்தை நிறைவு செய்திருத்தல்.

2. **வயது :** 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கான அதிகபட்ச வயது எல்லை ஏற்புடையதன்று.

3. **சம்பளம் :** HM1-1 - ரூ. (80,295 - 15x2,270 - 114,345)

4. **பிற :**

சகல விண்ணப்பதாரிகளும்,

4.1 இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

4.2 தீவின் எப் பாகத்திலும் பதவிக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளைச் செய்வதற்கும் மற்றும் பணியாற்றுவதற்கு உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

4.3 சிறந்த நற்பண்புகளைக் கொண்டவராக இருக்க வேண்டும்.

5. **ஆட்ச்சேர்ப்பு முறைமை**

நியமத்திற்கு அதிகாரம் பெற்ற அலுவலரினால் தீர்மானிக்கப்படும் பிரகாரம் பிரச்சித்த விளம்பரங்களை வெளியிட்டு விண்ணப்பங்களை அழைத்த பின்னர் கீழ் குறிப்பிட்ட பின்வரும் தேர்வு வழிகளில் பொருத்தமான மாற்று வழியொன்றின் ஊடாக ஆட்ச்சேர்ப்பு செய்யப்படலாம்.

அ) கட்டமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சையின் ஊடாக வெளியக விண்ணப்பதாரிகளை ஆட்ச்சேர்ப்புச் செய்தல்.

ஆ) கட்டமைப்பு ரீதியான நேர்முகப் பரீட்சையின் ஊடாக உள்ளக விண்ணப்பதாரிகளை ஆட்ச்சேர்ப்புச் செய்தல்.

மேற்கூறிய தகுதிகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் தாங்களாகவே தயாரித்த விண்ணப்பத்தை 2024 வருடம் பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்க வேண்டும்,அத்துடன் தமது சுயவிபரக் கோவையொன்றை இணைத்து, தொடர்புடைய சான்றிதழ்களின் உறுதிப்படுத்திய பிரதிகளுடன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் கிடைக்கப் பெறச் செய்தல் வேண்டும்.

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தகமைகளைப் பூர்த்தி செய்ததாக திருப்தி அடைந்த விண்ணப்பதாரர்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

அரச திணைக்களங்கள்/ கூட்டுத்தாபனங்கள்/ நியதிச்சட்ட சபைகளில் சேவையாற்றுகின்ற அலுவலர்களின் விண்ணப்பப் படிவங்கள் தமது திணைக்களங்கள் / நிறுவன தலைவரின் சிபாரிசுடன் தெரிவு செய்யப்பட்டால் விடுவிப்பதற்கு முடியுமா என்பது பற்றி குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது புற மேல் மூலையில் விண்ணப்பிக்கின்ற பதவியைக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

தலைவர்
காணிமறுசீரமைப்புஆணைக்குழு
இல.475
கடுவலவீதி
பத்தரமுல்லை
2024.02.08